பக்கங்கள் 17+1

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 12 திங்கட்கிழமை 24.02.2025 | அதிர்வு 208

## காணாமல்போன பாடசாலை மாணவி

### மக்களிடம் உதவி கோரல்



காணாமல்போயுள்ள பாடசாலை மாணவி ஒருவரைக் கண்டுபிடிக்க கந்தேநுவர பொலிஸார் 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# தேசபந்து தென்னக்கோனுக்கு எதிரான மனுக்கள் மே 6,7 மற்றும் 8ஆம் திகதிகளில் விசாரணைக்கு

## உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் தீர்மானம்



மேல் மாகாணத்துக்குப், பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகச் செயற்பட்ட தேசபந்து தென்னக்கோனைப் பொலிஸ்மா அதிபராக நியமிக்க மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் அரசமைப்புக்கு முரணானது எனத் தீர்ப்பளிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட 9 அடிப்படை உரிமை மனுக்களையும் 03



# 4 நாள்களில் 8 கொலைகள்

## தேசிய பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்துங்கள் என நாடாளுமன்றத்தில் அநுர அரசிடம் சஜித் வேண்டுகோள்

“கடந்த 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையிலான 4 நாள்களில் 8 கொலைகள் நடந்துள்ளன. தேசிய பாதுகாப்புக்கு இது பெரும் பிரச்சினையாக அமைந்திருந்தாலும், அது ஒரு பிரச்சினையல்ல என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையே இடம்பெற்று வரும் இந்தக் கொலைக் கலாசாரம் தேசிய பாதுகாப்புக்குப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. எனவே, தேசிய பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்துங்கள்.”

-இவ்வாறுஎதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசிடம் கோரிக்கை விடுத்தார். 03



### கனேமுல்ல சஞ்சீவ படுகொலை சந்தேகநபர்

# செவ்வந்தியை வலைவீசித் தேடும் பொலிஸ்! களுத்துறையில் தலைமறைவு எனத் தகவல்!!



பாதாள உலகக் கும்பலின் தலைவரான கனேமுல்ல சஞ்சீவ என்பவரைப் படுகொலை செய்ய துப்பாக்கிதாரிக்கு உதவி செய்தார் எனக் கூறப்படும் இஷார செவ்வந்தி என்ற பெண்ணைக் கைது செய்வதற்குப் பொலிஸார் சிறப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், சந்தேகநபரான பெண் களுத்துறை, மத்துகம பகுதியில் தலைமறைவாகியிருப்பதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

அதன்படி, களுத்துறை,மத்துகம மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளில் பொலிஸார், விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். 03

# தனது ஓட்டோவிலேயே உடல் நசுங்கி பரிதாபகரமாக உயிரிழந்த இளைஞர்



மாத்தறை, திக்வெல்ல பகுதியில் ஓட்டோ கவிழ்ந்ததில் இளைஞர் ஒருவர் உடல் நசுங்கி துரதிஷ்டவசமாக உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரதம்பல வீதியைச் சேர்ந்த 31 வயதான ஹேவா கலுகபுகே ஹசன் என்பவரே உயிரிழந்தார் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 3 மணியளவில் ரதம்பல வீதியில் வலஸ்கலைக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விசாரணையின்போது ஓட்டோ வீதியில் உள்ள சுவரில் மோதி கவிழ்ந்துள்ளது. அதன் கீழ் உடல் நசுங்கி இளைஞருக்கு மரணம் ஏற்பட்டது என்று தெரியவந்துள்ளது.

பிரேத பரிசோதனையில், வாகனத்தில் நசுங்கியதால் ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாக மரணம் ஏற்பட்டது என்று தெரியவந்துள்ளது.

# தலைமன்னார் கடற்பரப்பில் கைதான 32 இந்திய மீனவர்களுக்கும் மறியல்!









(எஸ்.ஆர்.லெம்பேட்)

தலைமன்னார் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 32 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் உத்தரவிட்டார்.

தமிழ்நாடு மாநிலம், இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 32 மீனவர்கள் அவர்களின் அதி நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் 5 படகுகளுடன் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை கடற்படையினரால் மேற்படி மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மன்னார் கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கடற்படையினரின் கூட்டு நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் .

கைது செய்யப்பட்ட மேற்படி 32 இந்திய மீனவர்களும் கடற்படையின் விசாரணைகளின் பின்னர் நேற்று மாலை மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்கள் மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் வாசஸ்தலத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் மேற்படி 32 மீனவர்களையும் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# இறுதிப் போரில் காணாமல்போன மகனைத் தேடி போராடி வந்த 'மாரி அம்மா' இன்று காலமானார்!






(கி.வசந்தன்)

வவுனியாவில் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் சுழற்சி முறைப் போராட்டத்தின் 3000 ஆவது நாளான இன்று, தனது மகனைத் தேடி வந்த தாய் ஒருவர் சுகவீனம் காரணமாக மரணமடைந்துள்ளார்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசித்து வந்த வேலுசாமி மாரி (மாரி அம்மா) என்பவரே தனது 79 ஆவது வயதில் மரணமடைந்துள்ளார்.

இவரின் மகனான வேலுச்சாமி சிவகுமார் 2009 ஆம் ஆண்டு இறுதிப் போரில் காணாமல் ஆக்கப்பட்டார்.

இந்நிலையில், 'மாரி அம்மா' என அழைக்கப்படும் வேலுசாமி மாரி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு போராட்டங்களில் முன்னின்று போராடியிருந்தார்.

வவுனியா ஏ - 9 வீதியில் சுழற்சி முறையில் இடம்பெற்று வரும் போராட்டத்திலும் இவர் தொடர்ச்சியாகப் பங்குபற்றியிருந்தார்.

தனது மரணத்துக்கு முன்பதாக தனது மகனை நேரில் பார்த்து விடுவேன் என ஏங்கிய ஒரு தாயின் ஏக்கம் இன்றுடன் நிறைவேறாமல் முற்றுப் பெற்றுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### காணாமல்போன...

பொதுமக்களிடம் உதவி கோரியுள்ளனர்.

மாத்தளை - கந்தேநுவர பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவர் கடந்த டிசம்பர் மாதம் 6 ஆம் திகதியில் இருந்து காணாமல்போயுள்ளார் என்று கந்தேநுவர பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது.

இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் காணாமல் போயுள்ள பாடசாலை மாணவியின் புகைப்படம் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இந்தப் புகைப்படத்தில் உள்ள பாடசாலை மாணவி தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைத்தால் கந்தேநுவர பொலிஸ் நிலையத்தின் 071 - 8592943 அல்லது 066 - 3060954 என்ற தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணாமல்போயுள்ள பாடசாலை மாணவியின் விவரங்கள்:-

பெயர் - இடம்கெதர தருஷி சம்பிக்கா
வயது - 16
முகவரி - இல. 85, கந்தேநுவர , அல்வத்த
அங்க அடையாளம் - 5 அடி உயரம்

### 4 நாள்களில்...

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"அண்மைய தினத்தில் நீதிமன்றத்தினுள் நடந்த மிலேச்சத்தனமான கொலையுடன் தொடர்புடைய பெண்ணின் வண்ணப் புகைப்படங்கள் உள்ளிட்ட தகவல்கள் புலனாய்வுத் தரப்புக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. இது தொடர்பிலான புலனாய்வு அறிக்கைகளை ஊடகங்கள் செய்தியாக வெளியிட்டன.

குறித்த கொலை தொடர்பிலான தகவல்கள் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்றிருந்தன. இவ்வாறு தகவல்கள் கிடைக்கப் பெற்றிருந்தும் பாதுகாப்பு குறைபாடுகள் ஏற்பட்டமை குறித்து தெளிவான விளக்கம் இங்கு வழங்கப்பட வேண்டும்.

கொலையாளிகளின் இந்தச் செயல்கள் பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்றன. புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைக்கப் பெற்ற பிறகு அது குறித்து நடவடிக்கைகளை எடுக்க இதைவிடவும் முறையான திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும்." - என்றார்.

### தேசபந்து...

விசாரணைக்கு எடுத்துக்கொள்ள திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பிரீத்தி பத்மன்சூரசேன, யசந்த கோத்தாகொட, ஏ.எச்.எம்.டீ.நவாஸ், சிரான் குணரத்ன, அச்சல வெங்கபுலி ஆகிய ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மனுக்கள் இன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

அதனடிப்படையில் எதிர்வரும் மே மாதம் 6,7 மற்றும் 8ஆம் திகதிகளில் மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நீதியரசர்கள் குழாம் தீர்மானித்துள்ளது.

பிரதிவாதியான தேசபந்து தென்னக்கோன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா நீதிமன்றில் இன்று முன்னிலையாகினார்.

தமது சேவை பெறுநர் பொலிஸ்மா அதிபர் பதவியில் செயற்படுவதை இடைநிறுத்தி உயர்நீதிமன்றத்தால் தற்போதும் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

இதன்படி மனுக்களை விரைவாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ள திகதி நிர்ணயிக்குமாறும் அவர் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார்.

கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் உள்ளிட்ட 9 தரப்பினரால் இந்த அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமிக்க அரசமைப்பு பேரவையால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சட்டத்துக்கு முரணானவை என மனுக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### செவ்வந்தியை...

பொலிஸார் குறித்த பகுதிகளில் வீதித் தடைகளை அமைத்து ரோந்துப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# முக்கிய வழக்கு

பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமித்தமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட ஒன்பது அடிப்படை உரிமை மனுக்கள் இன்று உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன. எதிர்வரும் மே 6, 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் அந்த மனுக்கள் மீதான விசாரணைக்குத் திகதி நிர்ணயித்து வழக்கை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்தது.

நீதியரசர்களான பிரீத்தி பத்மன் சூரசேன, யஸந்த கோதாகொட, ஏ.எச்.எம்.டி. நவாஸ், ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோர் கொண்ட ஆயம் முன்னிலையில் இந்த வழக்கு இன்று எடுத்துக் கொள்ளப்பட்ட போதே விசாரணைக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டது.

ஏற்கனவே, தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை கையாள்வதற்கு இடைக்காலத் தடை விதித்து உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

அதனால் அவரது இடத்துக்கு இப்போது பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரே கடமையாற்றுகின்றார்.

தேசபந்து தென்னக்கோன் பதவியில் இருந்து ஓய்வு பெறுவதற்கான வயதை எட்டும் வரை அல்லது அவருக்கு இடைக்கால தடை விதித்த இந்த உயர் நீதிமன்ற உத்தரவோ, அல்லது இந்த வழக்கோ முடிவுக்கு வரும் வரை இந்த நிலைமையே - பதில் பொலிஸ்மா அதிபரே பொலிஸ் துறையை நிர்வாகிக்கும் நிலைமையே - நீடிக்கும் என்பது புரிந்து கொள்ளத்தக்கது.

இலங்கையின் சட்ட வரலாற்றில் மிக முக்கியமானதாக இந்த வழக்கு அமையக்கூடும் என்று சட்டவட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் அரசமைப்புக் கவுன்ஸிலின் முடிவை - தீர்மானத்தை - ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்த அரசமைப்புக் கவுன்ஸிலின் தலைவரான அப்போதைய சபாநாயகர், அரசமைப்புக் கவுன்ஸில் ஒரு முடிவை எடுத்திருக்க, அதற்கு மாறான ஒரு தீர்மானத்தை தமது வியாக்கியானமாக மாற்றி, ஜனாதிபதிக்கு அது பற்றி அறிவிப்பு வழங்க, அந்த அறிவிப்பின் அடிப்படையில் உடனடியாகப் பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்தார்.

உண்மையில் பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் நியமிக்கப்படுவதற்கு எதிராகவே அரசமைப்புக் கவுன்ஸிலின் பெரும்பான்மை எண்ணிக்கை உறுப்பினர்கள் வாக்களித்த போதும், அதனை வேண்டுமென்றே பிழையாக அல்லது தவறாக வியாக்கியானம் செய்து, தேசபந்து தென்னக்கோனின் நியமனத்தை அரசமைப்புக் கவுன்ஸில் அங்கீகரித்திருப்பதாக ஒரு கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தார் அரசமைப்புக் கவுன்ஸிலின் தலைவரான சபாநாயகர்.

அந்த விடயமே இப்போது உயர்நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது. அரசமைப்புக்கவுன்ஸிலின் தலைவர் என்ற முறையில் சபாநாயகர் எடுத்த முடிவில் அல்லது தீர்மானத்தில் தலையிடும் அதிகாரம் உயர்நீதிமன்றுக்கு உண்டா என்ற சட்டச் சிக்கல் இந்த வழக்கில் முக்கிய விடயமாக இடம்பெறப் போகின்றது எனத் தெரிகிறது.

சபாநாயகரின் நாடாளுமன்ற செயற்பாடுகளில் உயர் நீதிமன்றம் தலையிடுவதற்கான வாய்ப்புகள் - சட்ட இடைவெளி - நியாயாதிக்கம் - குறைவாகவே உள்ளது.

ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டதாகப் பிழையான முறையில் சபாநாயகர் சான்றுரைக்கும் போது, அதில் தலையிட முடியாது எனத் தீர்மானித்த உயர் நீதிமன்றம், இப்போது என்ன செய்யப் போகின்றது என்று ஒரு கேள்வி எழுகின்றது.

இலங்கையின் நீதித்துறைக்கும் நாடாளுமன்ற நியாயாதிக்கத்திற்கு இடையிலான ஒரு அமிலச் சோதனை வழக்காக இது அமையப்போவது நிச்சயம்.

### உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் முடிவு எதனையும் எடுக்கவில்லை

### அதன் தலைவர் ஐங்கரநேசன் தெரிவிப்பு



ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி அமைத்துள்ள ஒன்பது கட்சிகளின் அணியில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கமும் ஒன்றாக இணைந்து உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட உள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்துடன் தமிழரசியல் கட்சிகள் சிலவும், தமிழரசியல் கட்சிகள் சிலவற்றுடன் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கமும் பேசி வருகின்றது. எனினும், இத்தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் இதுவரையில் எவ்வித முடிவுகளையும் எடுக்கவில்லை என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி அமைத்துள்ள அணியில் பசுமை இயக்கமும் இடம்பெற்றுள்ளதாக அறிவிப்புகள் வெளியாகியுள்ள நிலையில் அதுபற்றி பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்குக் கிழக்கில் ஜே.வி.பி. கணிசமான ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. இவ்வெற்றியைத் தமிழ்த்தேசிய அரசியலில் ஏற்பட்டுள்ள ஒரு பின்னடைவாகவும், உள்ளூராட்சித் தேர்தலிலும் ஜே.வி.பி. வெற்றி பெற்றால் அது தமிழ்த்தேசிய அரசியலுக்கு மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஜே.வி.ப. எப்பாடுபட்டேனும் தமிழ் மக்கள் மத்தியில் வேரூன்றிவிடவேண்டும் என்று தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. அண்மையில் அரசாங்கம் வெளியிட்ட பாதீட்டு அறிக்கை இதனைத் தெளிவுபடுத்துகிறது. இவற்றைக் கருத்திற் கொண்டு தமிழ்த்தேசிய அரசியற் கட்சிகள் சில கூட்டணி அமைத்து உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து அக்கறை காட்டி வருகின்றன.

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் பெற்ற பின்னடைவு கட்சிகளின் பிளவினால் மாத்திரம் ஏற்பட்ட ஒன்று அல்ல. யுத்தத்துக்குப் பின்னரான இளைய தலைமுறையிடம் தமிழ்த்தேசிய அரசியலின் இருப்புக் குறித்துக் கட்சிகள் எடுத்தியம்பாததே பிரதான காரணமாகும். தமிழ்த்தேசியக் கட்சிகளின் வேட்பாளர்கள் சிலர் தாங்கள் அமைத்துள்ள கூட்டணிக்கும் மக்களுக்கும் விசுவாசம் இல்லாது பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சேவகம் செய்யும் நோக்கில் அந்நிறுவனங்களிடம் இருந்து பலகோடி ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டு தேர்தலில் இறங்கியமையும், அரசிடம் இலஞ்சமாக மதுபான அனுமதிப் பத்திரங்களைப் பெற்று விற்றுச் சம்பாதித்தமையும் தமிழ்த்தேசியக் கட்சிகளின் மீது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளன.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் கட்சிகளின் ஒற்றுமை முயற்சிக்கு ஒருபோதும் எதிரானது அல்ல. எனினும், கூட்டு என்பது தேர்தலில் ஆசனங்களை மாத்திரம் குறியாகக் கொண்டிராது கொள்கை அடிப்படையில் அமைய வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும். ஜே.வி.பி. வெற்றி பெற்றுவிடக்கூடாது என்பதற்காக அரசியல் தரகர்களையும், தமிழ்த் தேசிய எதிராளிகளையும் ஆதரிப்பது தமிழ்த்தேசியத்தை மேலும் பலவீனமடையச் செய்யும். இது உண்மையான தமிழ்த் தேசியவாதிகளின் வெற்றி வாய்ப்பையும் பறித்துவிடும். இவற்றைக் கருத்திற்கொண்டே பசுமை இயக்கம் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான உபாயங்களை வகுக்கும். இதுபற்றிய முடிவுகளைத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் மக்களுக்குத் தானே அறியத்தரும். – என்றும் தெரிவித்துள்ளார்.





# மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர் காத்தல் தொடர்பான அடிப்படைப் பயிற்சி நெறி!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர் காத்தல் தொடர்பான அடிப்படை கற்கை நெறியும் மற்றும் பயிற்சி நெறியும் அம்பாறையில், அல் உஸ்வா இஸ்லாமிக் அமைப்பின் தலைவரும் அல் உஸ்வா மகளிர் அரபுக் கல்லூரியின் செயலாளருமான ஐ.எல்.எம். முஸ்தபா மௌலவியின் தலைமையில் அம்பாறை குளத்தில் நேற்று (23) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.



மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர் காற்றல் தொடர்பான பயிற்சி நெறியைக் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம்.எம். நஸீர் ஆரம்பித்து வைத்தார். அத்துடன், அம்பாறை பொலிஸ் நிலைய மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர் காத்தல் அதிகாரிகளான ஏ.டி. அசங்க, ஆர்.ஏ.எஸ்.என். குமார, எம்.ஆர்.சி.எஸ். பண்டார, கே.ஜி.எஸ். சரந்தினன், டபிள்யூ.டி.எஸ். வசந்த உள்ளிட்ட குழுவினரால் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு படகு ஓட்டுதல், தாழ்வான இடத்தில் தாழ்ந்தவரை எப்படி மீட்பது, படகை நிறுத்துவதற்கு நங்கூரத்தை எப்படி பயன்படுத்துவது மற்றும் பழுதடைந்த படகை திருத்துதல் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டன.





# அறிமுகமானது "அன்பின் முத்தங்கள்" கவிதை நூல்!

(அபு அலா, எஸ்.எம்.முபீன்)

அன்பின் பாதை எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் மகுடம் வி.மைக்கல் கொலினின் "அன்பின் முத்தங்கள்" கவிதை நூல் அறிமுக விழா நேற்று முன்தினம் (22) திருகோணமலை ஸ்ரீ பத்திர காளியம்பாள் தேவஸ்தான மண்டபத்தில் இடம்பெற்றது.







அன்பின் பாதை எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக.தீபகாந்தன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு முதன்மை விருந்தினராக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் மேலதிக செயலாளர் க.மகேசன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கே.குணநாதனும், கௌரவ விருந்தினராக கிழக்கு மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் நா.மணிவண்ணனும், அழைப்பு விருந்தினராக ஊடகவியலாளர் திருமலை நவமும் கலந்து கொண்டனர்.

"அன்பின் முத்தங்கள்" நூலின் முதன்மை பிரதியை திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளியம்பாள் தேவஸ்தான பிரதம குருவும் ஆதீனகர்த்தாவுமான சிவஸ்ரீ சோ.ரவிச்சந்திர குருக்கள் பெற்றுக்கொண்டார்.

அடுத்த பிரதியை திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபைத் தலைவரும் சட்டத்தரணியுமான திலகரத்தினம் துஷியந்தன் பெற்றுக் கொண்டார்.

அன்பின்பாதை எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றம் பல இலக்கியவாதிகளையும், எழுத்தாளர்களையும் ஊக்குவிக்கும் நோக்கில் அவர்களின் நூல்களை அறிமுகம் செய்துவைத்து அவர்களின் எழுத்துத் திறனின் ஆர்வங்களை மென்மேலும் தூண்டச் செய்து வருகின்றனர். இது அவர்களின் 30 ஆவது நூல் அறிமுக விழா என்பது குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் ஞானப்பிரகாசம் ஆண்டகை பணியேற்பு!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்ட அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை நேற்று முன்தினம் சனிக்கிழமை (22) மடு திருத்தலத்தில் வைத்து ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்ட நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை (23) மன்னார் மறைமாவட்ட ஆயராகப் பணிகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

நேற்று மாலை மடு திருத்தலத்தில் இருந்து மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப் பிரகாசம் ஆண்டகை மன்னார் தள்ளாடி அந்தோனியார் ஆலய பகுதியை வந்தடைந்தார்.

அதனைத் தொடர்ந்து ஆயர் அவர்களை மன்னார் பிரதான பாலத்தடிவரை மோட்டார் சைக்கிள் பவனியுடன் அழைத்துச் செல்லப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட வாகனத்தில் ஏற்றப்பட்டு அங்கிருந்து பவனியாக மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்துக்கு இன்னிசை வாத்தியங்களுடன் அழைத்துச் செல்லப்பட்டார்.

மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் பணிப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளும் நிகழ்வு, மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் பி.கிறிஸ்து நாயகம் அடிகளாரால் திருத்தூது மடல் வாசிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட ஆயராக கடந்த 7 வருடங்களாக பணியாற்றிய மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் புதிய ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையிடம் புனித செபஸ்தியார் பேராலயத்தின் திறவுகோல் வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து புனித செபஸ்தியார் பேராலயத்தின் பங்குத்தந்தை அருட்தந்தை சுரேந்திரன் றெவல் அடிகளாரால் புதிய ஆயருக்கு நற்கருணை பேழைக்கான திறவு கோல் வழங்கப்பட்டது.







அதனைத்தொடர்ந்து ஆயர் பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயரிடம் செங்கோல் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மன்னார் மறைமாவட்டத்தின் 4 ஆவது ஆயரான மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதன் போது குருக்கள், துறவியர்கள், அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள் உள்ளடங்களாக பல்லாயிரக் கணக்கான மக்களும் கலந்து கொண்டிருந்தனர்.



# சுழிபுரம் கடற்கரை பகுதிகளில் கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டம்

(எஸ். நிதர்ஷன்)

சுழிபுரம் கடற்கரை பகுதிகளில் கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டத்தின் கீழ் அழகிய தீவு புன்னகைக்கும் மக்கள் எனும் தொனிப்பொருளில் ஒரு அழகிய கடற்கரை கவர்ச்சியான சுற்றுலா தலம் எனும் நோக்கை அடிப்படையாக கொண்டு துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

சங்கானை பிரதேச செயலர் கவிதா உதயகுமார் தலைமையில் சுழிபுரம் திருவடி நிலை, புளியந்துறை, சவுக்கடி ஆகிய கடற்கரை பகுதிகளில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது .

இதனபோது சுழிபுரம் மேற்கு அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினர், வலிகாமம் மேற்குப் பிரதேச சபையினர், பொதுமக்கள், சங்கானை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் என பலரும்



கலந்து கொண்டனர்.

குறித்த திட்டத்தில் ஈடுபட்டிருந்தோருக்கு சுழிபுரம் மேற்கு அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினரால் தாகசாந்தி மற்றும் காலை நேர சிற்றுண்டி என்பன வழங்கப்பட்டன.







# எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் நுவரெலியாவைக் கைப்பற்றுவோம்!

## திகாம்பரம் எம்.பி. தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

மலையக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசு இன்னும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தைக் கைப்பற்றுவதற்கு முயற்சிக்கின்றோம்.

இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணி என்பவற்றின் முக்கியஸ்தர்களுடனான கலந்துரையாடல், ஹட்டன் டிகேடபிள்யு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதி செயலாளர் சோஸ்ரீதரன், இளைஞர் அணி தலைவர் பா.சிவநேசன், கட்சி உறுப்பினர்கள் என பலரும் கலந்துக் கொண்டனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல், தற்போதைய அரசியல் நடப்புகள் பற்றி இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் பிறகு ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட திகாம்பரம் எம்.பி. கூறியவை வருமாறு,

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு நாம் தயாராகி வருகின்றோம். இது சம்பந்தமாக தோட்டத் தலைவர்கள் உட்பட கட்சி பிரமுகர்களுடன் கலந்துரையாடினோம்.



தற்போதைய அரசு வாய்வீச்சு அரசாகவே உள்ளது. செயலில் எதுவும் நடப்பதாக தெரியவில்லை.

மலையக மக்கள் கடந்தமுறையும் தேசிய மக்கள் சக்திக்கு 50 ஆயிரம் வரையான வாக்குகளையே வழங்கினார். மலையகத்திலுள்ள கட்சிகளுக்குத்தான் கடந்தமுறையும் வாக்குகளை வழங்கினார்கள்.

மலையக மக்களுக்கு 10 பேர்ச்சஸ் காணி வழங்கப்படும் என்றார்கள், எதிரணியில் இருக்கும்போது மலையக மக்கள் தொடர்பில் அதிகம் கதைத்தார்கள். தற்போது அதிகாரத்தில் இருக்கும் போது தீர்வை முன்வைக்காமல் உள்ளனர்.

வரவு – செலவுத் திட்டத்தில் கூட மலையகத்தக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படவில்லை. ஒதுக்கப்பட்ட நிதியில் கூட இந்திய நிதியே பெருமளவு உள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வுகூட கைகூடுமா என தெரியவில்லை. எனவே, தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளராக்குவதன் மூலமே இந்த சம்பளப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காணமுடியும். – என்றார்.







# மாணவரின் கற்றல் செயற்பாட்டுக்கு கட்டடம் அமைத்துத் திறந்து வைப்பு

(க.மகாதேவன்-உடப்பு)

உடப்பு ஸ்ரீ கிருஷ்ணா ஆரம்பப் பாடசாலையில், சாயிதா அமைப்பின் நிறுவனத்தால் வழங்கப்பட்ட 40 லட்சம் ரூபா பெறுமதியான புதிய கட்டடம் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை (23) மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்குக் கையளிக்கப்பட்டது.

இதனை பாடசாலையின் அதிபர் திரு.எஸ்.கோகிலகாந்தன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வானது, மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவின் முயற்சியாலும், உடப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட ஐரோப்பிய நாட்டில் வாழும் மு.சகாதேவனின் பணிப்பின் பேரிலும் இந்தக் கட்டடம் அமைத்து வழங்கப்பட்டது.

இலங்கையினுடைய இணைப்பாளராகச் செயற்பட்ட முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நௌஸாத் பௌசி முன்னிலையில், ஐக்கிய அரபு இராச்சியத்தினுடைய சாயிதா நிதியத்தினுடைய பணிப்பாளர்களில் ஒருவராகிய கலாநிதி பாத்திமா சலீம் இந்தக் கட்டடத்தைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

கலாநிதி பாத்திமா சலீம், அவரின் கணவர் ஆதிப் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.



இலங்கை சாயிதா நிறுவனத்தினுடைய இணைப்பாளராக செயற்பட்டுக் கொண்டிருக்கும் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் அல்ஹாஜ் நௌஸாத் பௌசி, இந்தக் கட்டடத்தை அன்பளிப்பு செய்வதற்காக உறுதுணையாக இருந்த மறைந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் பாரியார் திருமதி சமரி பெரேரா ஆகியொரும் கலந்து கொண்டனர்.

அதே போல உடப்பு இந்து ஆலய பரிபாலன சபையின் தலைவர் மற்றும் அயல் பாடசாலை அதிபர்கள் மற்றும் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# அபிவிருத்தி முன்மொழிவுகளை சமர்ப்பித்த நிசாம் காரியப்பர் எம்.பி.!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனைத் தொகுதியில் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமுமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

இதன் ஓர் அங்கமாக அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தன்னால் முன்மொழியப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட சில அவசர வேலைத் திட்டங்களுக்கான நகல் வரைவுகளை அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்திக அபேவிக்ரமவிடம் அவர் சமர்ப்பித்துள்ளார்.




இவற்றுள் வாகன நெரிசல் மிக்க சாய்ந்தமருது நகரில் வர்த்தக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக அங்கு வாகனத் தரிப்பிடம் ஒன்றை அமைப்பதற்கும் கல்முனை மாநகரில் வெஸ்லி உயர்தர பாடசாலைக்கு முன்பாக போக்குவரத்து சமிக்ஞை கட்டமைப்பை அமைப்பதற்குமான முன்மொழிவுத் திட்டங்களையும் நிசாம் காரியப்பர் எம்.பி. சமர்ப்பித்துள்ளார்.

அத்துடன் கல்முனை மாநகர மற்றும் மாளிகைக்காடு கடல் பகுதிகளில் கரை வலை மீன்பிடித் தொழிலுக்கு இடையூறாக காணப்படும் கற்கள் மற்றும் கழிவுகளை அகற்றல், கல்முனை மேல் நீதிமன்றத்தில் அமைந்துள்ள சட்டத்தரணிகளுக்கான நூலகத்தை டிஜிட்டல் மயப்படுத்தல், கல்முனை மாநகரில் உள்ளூர் மற்றும் சிறு கைத்தொழில் உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதற்காக தற்காலிக விற்பனை கூடங்களை அமைத்தல் போன்ற முன்மொழிவுகளையும் அம்பாறை மாவட்ட செயலாளரிடம் அவர் சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998







# இலங்கை தேசிய கட்டுமான சங்கத்தின் 28 ஆவது வருட விருது வழங்கும் விழா

(றியாஸ் ஆதம், நூருல் ஹுதா உமர், எம்.ஏ.றமீஸ்)

இலங்கை தேசிய கட்டுமான சங்கத்தின் 28 ஆவது வருட விருது வழங்கும் விழா அச்சங்கத்தின் அம்பாறை, கல்முனை கிளையின் தலைவர் எம்.பி.எம்.ஹஸீர் தலைமையில் வெள்ளிக்கிழமை (21) அம்பாறை மிண்டாடா விடுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரம பிரதம அதிதியாகவும், இலங்கை தேசிய கட்டுமான சங்கத்தின் தலைவர் ப்ரிட்டன் போல் கௌரவ அதிதியாகவும், அம்பாறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் அசல ஹேரத் விசேட அதிதியாகவும், பொறியியலாளர்கள் மற்றும் தேசிய கட்டுமான சங்கத்தின் முக்கியஸ்தர்கள், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

தேசிய கட்டுமான சங்கத்தின் பிராந்திய தவிசாளர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் 2024 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சிறந்த முறையில் கட்டுமான பணிகளை முன்னெடுத்த நிறுவனங்களுக்குக் கட்டுமான சிறப்பு விருது மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டன.

அத்துடன் தேசிய கட்டுமான சங்கத்தின் அம்பாறை, கல்முனை கிளையின் தலைவர்களாகச் செயற்பட்டு சங்கத்தை சிறப்பாக வழிநடத்தியமைக்காக அதன் முன்னாள் தலைவர்களான ஐ.எல்.எம்.மிஜ்வாத், கே.எம். சக்கரியா ஆகியோரும் இந்த நிகழ்வில் விசேட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் நிர்மாணத்துறையில் நேர்த்தியாகவும், சிறந்த முறையிலும் பணிகளை முன்னெடுத்த நிறுவனங்கள், ஒப்பந்தக்காரர்கள் எனப் பலர் இதன்போது சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.





# ஐக்கிய மக்கள் காங்கிரஸின் அலுவலகம் திறந்து வைப்பு!

(ஏ.எச்.எம்.ஹாரீஸ், நூருல் /ஹுதா உமர், பாறுக் ஷிஹான் )

ஐக்கிய மக்கள் காங்கிரஸின் உத்தியோகபூர்வ அலுவலகம் அதன் செயலாளர் ஏ.சி.யஹியாக்கான் தலைமையில் நேற்று (23) சாய்ந்தமருதில் திறந்து வைக்கப்பட்டது.

இதன் போது அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் கடந்த 15 வருடங்களாக இணைந்து பயணித்து வருகிறேன். மறைந்த மாபெரும் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் இந்த கட்சியை எமது சமூகத்தின் இருப்புக்காகவும், பிரதேச அபிவிருத்திக்காகவும் உருவாக்கினார். ஆனால் இப்போது உள்ளவர்கள் தமது கஜானாக்களை நிரப்புவதற்காக இதனைப் பாவித்து வருகின்றனர். நான் இக்கட்சியால் பல்வேறு வெட்டுக் குத்துக்களையும், ஏமாற்றங்களையும் நேரடியாக சந்தித்தவன். முஸ்லிம் சமூகத்துக்கு எவ்வித பயனும் தராத, காணிகளை மீட்க திராணியற்ற, கல்முனை நகர அபிவிருத்திக்கு தடையாக இருக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் தொடர்ந்தும் பயணிக்க முடியாது என்பதை உணர்ந்து சிந்தித்து அங்கிருந்து வெளியேறினேன்.


எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு எந்த எண்ணமும் இவர்களுக்கில்லை. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏமாற்று அரசியலை செய்து வருகின்றது. ஸ்ரீலங்கா



முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகள் அமைச்சராக இருந்தும் கல்முனைக்கு எவ்வித அபிவிருத்திகளும் நடக்கவில்லை. கல்முனையை அபிவிருத்தி செய்ய முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ் எடுத்த எத்தனங்களை அவர்களே தடுத்தார்கள். இந்தக் கட்சியில் வாய்மூடி மௌனியாக இருந்து சொல்வதற்கெல்லாம் ஆம் என்று தலையசைத்தால் மாத்திரமே கட்சியில் உறுப்பினராக இருக்க முடியும். அதை மீறி செயற்பட்டால் கட்சி உறுப்புரிமையை இழந்து தான் நிறகவேண்டி வரும்.

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய மக்கள் காங்கிரஸ், அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களிலும் திருகோணமலை உட்பட இன்னும் சில மாவட்டங்களிலும் களமிறங்க தயாராகி வருகிறோம்.– என்றார்.






# அலிகார் வரலாற்று கருவூலங்கள் - நூல் வெளியீடு!

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

மன்னார் மாவட்டத்தின் மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட விடத்தல்தீவு அலிகார் மஹா வித்தியாலயத்தின் வரலாறுகளை கொண்ட விடத்தல்தீவு அலிகார் வரலாற்று கருவூலங்கள் என்னும் தலைபைபிலான நுல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் (22) புத்தளம் தில்லையடி ஆர்.ஜே. மண்டபத்தில் இடம்பெற்றது.



தினகரன் பத்திரிகையின் முன்னாள் இணை செய்தி ஆசிரியரும், சிரேஷ்ட எழுத்தளாருமான சுஜப்.எம்.காசிம் இந்த நூலை எழுதியிருந்தார்.

வடக்கில் பிரபாலமான பாடசாலை யாக காணப்பட்ட அலிகார் பல்துறை யாளர்களை உருவாக்கிய நிலையில் 90 களுக்கு முன்பும், அதற்கு பின் னரும் வடபுல முஸ்லிம்களின் வெளி யேற்றத்தின் பின்னரும் விடத்தல்தீவு அலிகார் மஹா வித்தியாலயத்தின் பதிவுகளை மையமாகக் கொண்டு இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

தேசிய கல்வி நிறுவகத்தின் திட்ட மிடல் பணிப்பாளரும், கல்வி அமைச் சின் பாடவிதான அபிவிருத்தி நிலைய கணித பாட கருத்திட்ட உறுப்பினருமான எம்.ஏ.வாஹித் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வின் அதிதியாக மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் மாணிக்கவாசகர் ஸ்ரீ ஸ்கந்த குமார் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றியதுடன், நூலையும் வெளியிட்டு வைத்தார்.

இதேவேளை, முன்னாள்நிதிஅமைச் சின் மேலதிக பணிப்பாளர் நாயகமும், நூல் ஆக்க குழுவின் தலைவருமான ஏ .எம் .அமீன் வரவேற்புரையை நிகழ்த்த நூலாசிரியர் பற்றிய விளக்கத்தை வவுனியா பல்கலைக்கழக ஆங்கில துறை தலைவர் விரிவுரையாளர் பேராசிரியர் ஞானசீலன் வழங்கி னார்.

நூலாய்வை ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான முன்னாள் வதிவிட பிரதி நிதியும் சிறந்த இலக்கிய வாதியுமான ஏ.எல்.எ.அசீஸ் நிகழ்த் தினார்.

சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் சட்டத்தரணி அமீர் பாயிஸ் உள்ளிட்ட பலரும் இதன் போது உரை யாற்றினர்.

மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் மாணிக்கவாசகர் ஸ்ரீஸ்கந்த குமார் நூலாசிரியர் சுஜப்.எம். காசிமுக்கு சினைவுச் சின்னம் ஒன்றை வழங்கினார்.



# மின்னொளியிலான கரப்பந்தாட்டம்

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை வளர்மதி விளை யாட்டுக் கழகம், இருபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் மின் னொளியிலான நான்கு பேர் கொண்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி இடம் பெறவுள்ளது.

இந்தப் போட்டியானது எதிர்வரும் முதலாம் திகதி மாலை 7 மணிக்கு வளர்மதி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது என்று நிர்வாகக் குழு தெரிவித்துள்ளது.

நான்கு பேர் கொண்ட போட்டில் கலந்து கொள்ள கட்டுப்பணம் செலுத்த வேண்டும் என்றும் குறித்த போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்கு முதல் நான்கு இடங்களுக்கான வெற்றி கிண்ணமும் பணப்பரிசும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரையிறுதிச் சுற்றுக்கு தெரிவு செய்யப்படாத நான்கு கழகங்களுக்கும் வெற்றி கிண்ணமும் பரிசும் வழங் கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.





# சமுர்த்தி தலைவர்கள், உத்தியோகத்தர் கௌரவிப்பு நிகழ்வுகள் சாய்ந்தமருதில்

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாக தெரிவும் மற்றும் சமுர்த்தி சமுதாய தலைவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் வெள்ளிக்கிழமை (21) சாய்ந்தமருது வொலிவேரியன் கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றன.

சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி சங்கத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் நியாத் ஏ. மஜீத் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் பொறுப்புகளும் கடமைகளும் எனும் தலைப்பில் பிரதம பேச்சாளராகச் சாய்ந்தமருது பிரதேச செயலகத் தலைமைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ,நஜீம் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வுக்குக் கௌரவ அதிதிகளாக சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா, சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.எஸ்.ஹிதாயா, சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் விடய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீன், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர், சமுர்த்தி வலய உதவியாளர் எம்.எஸ்.எம்.நௌஷாத், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் கே.எம்.கபீர், உள்ளிட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது 2023 ஆம், 2024 ஆம் ஆண்டுகளில் சமுர்த்தி அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சமுர்த்தி சமூக அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய சமுர்த்தி முகாமையாளர்களான எஸ்.றிபாயா, ஐ.எல்.எஸ். ஹிதாயா மற்றும் வலய உதவியாளர் எம்.எஸ்.எம். நௌஷாத், சமுர்த்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம். எம்.ஜாபீர், எம்.எம்.றஸானா, ஜே.எம்.றம்ஸா, எம்.ஐ,அன்சார், ஏ.எம்.அபுல் ஹுதா, எம்.எஸ்.றூருல் றிபா, எம்.ஆர்.எஸ். ஷாமிலா, ஏ.எம்.காலிதீன் ஆகியோர் பாராட்டப்பட்டனர்.

மேலும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பைக் கடந்த காலங்களில் சிறந்த முறையில் வழிநடத்தி நல்ல பல சமூக நலத் திட்டங்களை மேற்கொண்ட சமுதாயத் தலைவர்களான சிரேஷ்ட ஊடகர் எம்.ஐ.சம்சுதீன், ஏ.எம். எம்.பசீல், இஸட்.எல்.முந்திறூன், எஸ்.எம்.முபிதா, எம். ஏ,றஷீட், கே.எம்.கபீர், ஏ,எம்.நவாஸ், எம்.ஐ,அலாவுதீன் ஆகியோருக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், தலைமைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ,நஜீம் மற்றும் சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவின் வேலைத் திட்டங்களை வழிநடத்தி 2023 ஆம் ஆண்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் தேசிய விருது பெற்ற சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர் உள்ளிட்டோரை சமுதாயத் தலைவர்கள் பொன்னாடை போர்த்திக்









# கலை இலக்கிய மன்றங்களை வலுவூட்டி கிழக்குக் கலையை விருத்தி செய்யலாம்!

### 120 மில்லியன் ஒதுக்கீடு என்கிறார் மாகாண பணிப்பாளர் நவநீதன்

( வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கில் கலை இலக்கிய மன்றங்களை வலு ஊட்டுவதன் மூலம் கலையை விருத்தி செய்யலாம் என்று கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் கலாசார திணைக்கள பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட கலைஞர்கள் ஒன்று கூடல் அக்கரைப்பற்று தம்பட்டை சுவாட் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கலை இலக்கியவாதிகளின் துறைசார் அறிவு, அனுபவங்களை பகிர்தல் மற்றும் விருத்தி செய்தல் எனும் நோக்கில் நேற்று முன்தினம் (22) சனிக்கிழமை அம்பாறை மாவட்ட கலை இலக்கிய செயற்பாட்டாளர்களுக்காக நடத்திய வாய்மை விருத்தி ஒன்று கூடுல் செயலமர்வு நடைபெற்றது.

இதில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் அங்கு தெரிவிக்கையில்,

இவ்வருடம் கிழக்கு மாகாண கலை பண்பாட்டு கலாசார நடவடிக்கைக்காக 120 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது .

இவற்றில் ஆலயங்களுக்கு வணக்கஸ் தலங்களுக்கு நிதி ஒதுக்க முடியாதவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் வருடம் ஒன்றுக்கு 250 - 350 வரையிலான நூல்கள் வெளியிடப்படுகின்றன .

ஒப்பீட்டளவில் அவற்றில் அம்பாறை மாவட்ட கலைஞர்களின் நூல்களே அதிகம். இதனால் இவ் வருடம் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 40 வீதமான நிதியை அம்பாறை மாவட்டத்துக்குக் கொடுக்க வேண்டும். மீதி 60 வீதம் தான் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இதேவேளை பெரிய நீலாவணையில் எமக்கென்று கலாச்சார மண்டபம் ஒன்று 75 லட்ச ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இனிமேல் அந்த கட்டடத்தில் எமது கலைஇலக்கிய நிர்வாக பயிற்சி ஒன்று கூடல் பயிற்சி பட்டறை போன்றன இடம்பெறும்.- என்றார்

நிகழ்வில் ஆலையடிவேம்பு உதவி பிரதேச செயலாளர் ஆர்.சுதாகர், லாகுகலை உதவி பிரதேச செயலாளர் க.சதிசேகரன், அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர் வை.றஷீட், அட்டாளைச்சேனை உதவி பிரதேச செயலாளர் திருமதி முஸாபிர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் தமிழ் மணி உமா வரதராஜன் உள்ளிட்ட வளவாளர்களும் கலந்து கொண்டனர்.

மாகாண சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் வி.குணபால, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏல்.தௌபீக் மற்றும் கலாச்சார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.





# திருகோணமலை மாவட்ட கலைஞர்கள் ஒன்று கூடல்



(எச். எம். ஹலால்தீன்)

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவலகல் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட, திருகோணமலை மாவட்ட கலைஞர்கள் ஒன்று கூடல் நிகழ்வு திருகோணாமலை கச்சேரியில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவலகல் கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் நவநீதன்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலாசார உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகள் பலர் கலந்து கொண்டனர்.



# சுகாதாரப் பணிப்பாளர்களுக்கான பாராட்டு விழா கல்முனையில்!

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலையில் கடந்த காலத்தில் சீரிய பணியாற்றிச் சென்ற இரு சுகாதார பணிப்பாளர்களுக்கான சேவை நலன் பாராட்டு நிகழ்வும், சிறப்பான சேவையாற்ற வந்திருக்கும் புதிய பணிப்பாளருக்கான வரவேற்பு நிகழ்வும் நேற்று முன்தினம் (22) ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றன.

கல்முனை ஆதார வைத்தியசாலையில் பணிப்பாளர்களாக பணிபுரிந்து, இடமாற்றம் பெற்று, தற்போது மட்டக்களப்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளராக பணியாற்றும் வைத்திய கலாநிதி மருத்துவர் இரா.முரளீஸ்வரன், மற்றும் தற்போது அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளராக பணியாற்றும் மருத்துவர் எஸ்.சந்திரசேன ஆகியோருக்கான சேவை நலன் பாராட்டு பிரியாவிடை நிகழ்வாகவும், புதிதாக பணிப்பாளராக கடமையேற்றுள்ள வைத்தியகலாநிதி மருத்துவர் குணசிங்கம் சுகுணனுக்கு வரவேற்பளிப்பதாகவும் இவ் விழா ஏற்பாடு செய்யப்பட்டது .

விழா நாயகர்கள் பொன்னாடை போர்த்தி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் விசேட பரிசுகளும் நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.









# மத்திய மலைநாட்டில் கடும் வறட்சி; காட்டுத் தீ ஏற்படும் என்று எச்சரிக்கை

(மஸ்கெலியா )

மத்திய மலைநாட்டில் பல பகுதிகளில் நிலவும் வறண்ட வானிலை மற்றும் கடுமையான வெயில் காரணமாக மத்திய மலைநாட்டில் எந்த நேரத்திலும் காட்டுத் தீ ஏற்படும் அபாயம் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்று பொலிஸார், வன பாதுகாப்பு, வனவிலங்கு துறை அதிகாரிகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அத்துடன், காடுகளில் விழும் வலுவான சூரிய ஒளி காரணமாக, அந்தக் காடுகளில் உள்ள தாவரங்கள் வெயிலால் எரிந்து எந்த நேரத்திலும் தீப்பிடிக்கும் நிலையில் உள்ளன.

மாத்தளை, கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் அமைந்துள்ள பல இயற்கை காடுகளில் இந்த நிலைமையைக் காணலாம். கண்டியின் மாத்தளை மாவட்டத்தின் எல்லையில் உள்ள நக்கிள்ஸ் மலைத்தொடரின் சில பகுதிகள், ஹந்தன மலைத் தொடர் மற்றும் நுவரெலியா மாவட்டத்தின் எல்லையில் உள்ள ஹோட்டன் தன்ன ஆகியவற்றின் அதிக ஆபத்துகள் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக பல ஒதுக்கப்பட்ட காடுகளில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, எந்த நேரத்திலும் காட்டுத் தீ ஏற்படும் அபாயம் இருப்பதால், பொது மக்கள் மற்றும் இந்த இடத்தைப் பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# சைவத்தமிழ் மன்றம் நடத்திய பட்டமளிப்பு விழா!

(பழுவூரான)

சைவத்தமிழ் மன்றம் நடத்திய பட்டமளிப்பு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை (23) மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சைவத்தமிழ் மன்றத் தலைவர் சைவப்புலவர், சைவப் பண்டிதர் பேராசிரியர் தி.சதானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்த மூர்த்திக் குருக்கள் முன்னிலை வகித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடாதிபதி கலாநிதி வ.குணபாலசிங்கம் மற்றும் இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் சிவாகமஞானபாலு சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்கள், நினைவு அறக்கட்டளைத் ஸ்தாபகர் சிவாகம கலாநிதி சிவஸ்ரீ கு.வை.க.வைதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் முன்னிலை அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கு.ரவிச்சந்திரன், கல்லடி விவேகானந்தா மகளிர் கல்லூரி அதிபர் திருமதி நவகீத்தா தர்மசீலன், மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப் புரவலர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி, மட்டக்களப்புத் மாவட்ட இந்துக் கலாசார உத்தியோகத்தர் கி.குணநாயகம் மற்றும் அம்பாறை மாவட்ட இந்துக் கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வு ஆரம்பமாக முன்னர் பிள்ளையாரடி பிள்ளையார் ஆலயத்திலிருந்து இளம் சைவப் புலவர்கள் மற்றும் சைவப் புலவர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

இதன்போது திருமுறை விண்ணப்பம், நந்திக் கொடியேற்றல், இளஞ் சைவப் பண்டிதர்களுக்கான பட்டமளிப்பு, சத்தியப் பிரமாணம் ஆகிய முக்கிய நிகழ்வுகள் அரங்கேறின.

இந்த நிலையில் அதிதிகள் மற்றும் நிகழ்த்துகை செய்தவர்கள் விழாக் குழுவால் நினைவுச் சின்னம் வழங்கிப் பாராட்டப்பட்டனர். இவ்விழாவில் சைவப்புலவர் சாமித்தம்பி தில்லைநாதன் எட்டு பேருக்கு இளம் சைவப் புலவர்பட்டம்வழங்கிக்கௌரவப்படுத்தினார்.





# இரண்டாம் மொழியை நிறைவு செய்த உத்தியோகத்தர்களுக்குச் சான்றிதழ்!

(பழுவூரான்)

இரண்டாம் மொழி சிங்கள கற்றை நெறியை நிறைவு செய்த உத்தியோகத்தர்களின் கலாசார மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

அரச சேவையை வழங்கும் உத்தியோகத்தர்களின் மொழி அறிவை மேம்படுத்துவதற்கு தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மாவட்ட செயலக ஒருங்கிணைப்பின் மொழிகள் மத்திய பயிற்சி நிலையத்தில் தமிழ்மொழி அரச உத்தியோகத்தர்களுக்கான 100 மணித்தியாலக் கற்றை நெறி வழங்கப்பட்டது.

மாவட்டத்தின் நீதிமன்றம், ஆயுள் வேத வைத்தியசாலை, பிரதேச செயலகம், மாவட்ட செயலகம், விமானப்படை, பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகிய துறைகளில் கடமையாற்றும் தமிழ்மொழி மூலமான உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழி சிங்கள கற்றைநெறி பயிற்சி வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் அதிதிகளாக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம், உதவி மாவட்ட செயலாளர் ஜி.பிரணவன், தேசிய மொழி பிரிவு மாகாண நிலைய உத்தியோகத்தர் சுபாஷிணி ரகுவரதன், மாவட்ட செயலக மொழிக் கல்வி இணைப்பாளர் பி.சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வளவாளர்களாக திலினி மதுஷிகா , தாரணியா மற்றும் நிகில்டா, ரோசான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நடிகை விஜயலட்சுமியின் புகார் குறித்த வழக்கில் சீமான் மீது விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல்



தன்னை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி ஏமாற்றிவிட்டார் என நடிகை விஜயலட்சுமி அளித்த புகாரின்பேரில் பதியப்பட்ட பாலியல் வழக்கை ரத்து செய்யக்கோரி சீமான் தாக்கல் செய்திருந்த மனுவை, உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்த நிலையில் சீமானை மீண்டும் விசாரிக்க பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

தன்னை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் ஏமாற்றிவிட்டார் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானுக்கு எதிராக நடிகை விஜயலட்சுமி சென்னையில் உள்ள வளசரவாக்கம் பொலிஸ் நிலையத்தில் 2011 இல் புகார் அளித்திருந்தார். அதன்பேரில் பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட பிரிவுகளின்கீழ் பொலிஸார் வழக்குப்பதிந்தனர்.

இந்நிலையில், இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி சீமான் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அதில், நடிகை விஜயலட்சுமி தனக்கு எதிராக கடந்த 2011இல் அளித்த பாலியல் புகாரை 2012 இல் திரும்பப்பெறுவதாக எழுதிக் கொடுத்தார். அதன் அடிப்படையில் பொலிஸார் அந்த வழக்கை முடித்து வைத்தனர். ஆனால், தற்போது அரசியல் காரணங்களுக்காக அந்த வழக்கை பொலிஸார் மீண்டும் விசாரித்து வருகின்றனர். எனவே விஜயலட்சுமி அளித்த புகாரின்பேரில் பதியப்பட்ட வழக்கை ரத்து செய்ய வேண்டும் எனக் கோரியிருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பாக அண்மையில் நடந்தது. சீமான் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், 'சிலரது தூண்டுதல் காரணமாக அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் பதியப்பட்ட இந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும்' என வாதிட்டார். பொலிஸ் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், 'நடிகை விஜயலட்சுமியும், சீமானும் 2008 ஆம் ஆண்டு மதுரை மீனாட்சியம்மன் கோயில் வெளிப்பிரகாரத்தில் மாலை மாற்றிக் கொண்டுள்ளனர். ஆனால் தாலி கட்டவில்லை. தன்னை திருமணம் செய்து கொள்வதாக சீமான் கூறியதன் காரணமாகவே விஜயலட்சுமி, சீமானுடன் நெருங்கிப் பழகியுள்ளார். பின்னர், அவர் அளித்த பாலியல் புகாரை சிலர் அளித்த நிர்பந்தம் காரணமாகவே திரும்பப் பெற்றார். அவராகவே மனமுவந்து வாபஸ் பெறவில்லை. எனவே, சீமானுக்கு எதிரான இந்த பாலியல் வழக்கை ரத்து செய்யக்கூடாது' என வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி ஜி.கே.இளந்திரையன், "அப்படியென்றால் நடிகை விஜயலட்சுமி சீமானுக்கு முதல் மனைவியா என கேள்வி எழுப்பியதோடு இந்த வழக்கை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. விஜயலட்சுமி புகாரை திரும்பப் பெற்றாலும்கூட பாலியல் துன்புறுத்தல் தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு இருப்பதால், இந்த வழக்கை ரத்து செய்ய முடியாது. இந்த வழக்கில் பொலிஸார் 12 வார காலத்துக்குள் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டு சீமான் தாக்கல் செய்திருந்த மனுவை தள்ளுபடி செய்தார்.

இதையடுத்து, இந்த விவகாரம் குறித்து பொலிஸார் மீண்டும் விசாரணையில் இறங்கி உள்ளனர். இதன் தொடர்ச்சியாக சீமானுக்கு விரைவில் சம்மன் அனுப்பி அவரை அழைத்து மீண்டும் விசாரிக்க திட்டமிட்டுள்ளனர்.

# அந்நிய சக்திகளுடன் சேர்ந்து நாட்டை பலவீனப்படுத்த முயற்சி

## பிரதமர் நரேந்திர மோடி குற்றச்சாட்டு



"சில அரசியல் தலைவர்கள் அந்நிய சக்திகளோடு கைகோத்து நாட்டை பலவீனப்படுத்த முயற்சி செய்கின்றனர். இந்து மதத்தையும் மகா கும்பமேளா உள்ளிட்ட இந்து பண்டிகைகளையும் விமர்சிக்கின்றனர். சமுதாயத்தில் பிரிவினையை தூண்ட முயற்சி செய்கின்றனர்."

- இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி குற்றம் சாட்டி உள்ளார்.

மத்திய பிரதேசத்தின் சத்தர்பூர் மாவட்டம், கர்ஹா கிராமத்தில் பாகேஷ்வர் தாம் அமைந்துள்ளது. இந்த கோயில் அறக்கட்டளை சார்பில் கர்ஹாவில் 218 கோடி ரூபா செலவில் 25 ஏக்கர் பரப்பளவில் புற்றுநோய் மருத்துவமனை கட்டப்படுகிறது. இதற்கு பிரதமர் நரேந்திர மோடி நேற்று அடிக்கல் நாட்டினார். அப்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

"சில அரசியல் தலைவர்கள் இந்து மதத்தை விமர்சித்து வருகின்றனர். மகா கும்பமேளா உள்ளிட்ட இந்து மத பண்டிகைகள் குறித்தும் இந்து பாரம்பரியங்கள் குறித்தும் எதிர்மறையான கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர். அவர்கள் இன்னமும் அடிமைத்தன மனநிலையில் இருந்து விடுபடவில்லை.

அந்த அரசியல் தலைவர்கள், அந்நிய சக்திகளோடு கைகோத்து நாட்டை பலவீனப்படுத்த முயற்சி செய்கின்றனர். சமுதாயத்தில் பிரிவினையை தூண்டி, ஒற்றுமையை சீர்குலைக்க தீவிர முயற்சி செய்கின்றனர். அவர்களின் சதியை, மக்கள் முறியடிக்க வேண்டும்.

உத்தர பிரதேசத்தின் பிரயாக்ராஜில் மகா கும்பமேளா நடைபெற்று வருகிறது. இந்த விழா நாட்டு மக்களை ஒன்றிணைக்கிறது. நாட்டின் மூலை, முடுக்கெல்லாம் மகா கும்பமேளா குறித்து மக்கள் பேசுகின்றனர். கோடிக்கணக்கான மக்கள் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி உள்ளனர். பிரயாக்ராஜில் பக்தி மட்டுமன்றி சமூக சேவையும் நடைபெற்று வருகிறது. இதுவரை சுமார் 2 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு இலவசமாக கண் பரிசோதனை நடத்தப்பட்டு உள்ளது. சுமார் 1.5 லட்சம் பேருக்கு இலவசமாக மருந்துகள், கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டு உள்ளன. 16,000 பேருக்கு இலவசமாக கண் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு உள்ளது.

இந்து கோயில்கள், வழிபாட்டுத் தலங்கள் மட்டுமல்ல. அவை மக்களுக்கு சேவையாற்றும் புனிதத் தலங்களாக விளங்குகின்ற. நமது சாதுக்கள் ஆயுர்வேதம், யோகாவை உலகத்துக்கு நன்கொடையாக வழங்கி உள்ளனர்.

நான் ஏழை குடும்பத்தை சேர்ந்தவன். ஏழைகளின் துன்பம் எனக்கு தெரியும். நாடு முழுவதும் ஏழை குடும்பங்களின் நலனுக்காக ஆயுஷ்மான் மருத்துவ காப்பீட்டை திட்டத்தை அமல்படுத்தினேன். நாடு முழுவதும் மக்கள் மருந்தகங்கள் திறக்கப்பட்டு உள்ளன. வெளிசந்தையில் 100 ரூபாவுக்கு விற்கப்படும் மருந்து, மக்கள் மருந்தகத்தில் 15 ரூபாவுக்கு கிடைக்கிறது.

நாடு முழுவதும் 700 மாவட்டங்களில் 1,500 டயாலசிஸ் மையங்கள் திறக்கப்பட்டு உள்ளன. இந்த மையங்களில் சிறுநீரக நோயாளிகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

புற்றுநோய் மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்து இருக்கிறது. இதை கருத்தில் கொண்டு மத்திய பட்ஜெட்டில் பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு உள்ளன. புற்றுநோயை தடுக்க புகையிலை பொருட்களை அறவே தவிர்க்க வேண்டும். புற்றுநோய்க்கான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும். அடுத்த 3 ஆண்டுகளில் ஒவ்வொரு மாட்டத்திலும் புற்றுநோய் சேவை மையங்கள் திறக்கப்படும்." என்றார்.

# நைஜீரியாவில் பஸ்ஸும் லொறியும் மோதி விபத்துக்குள்ளானதில் 14 பேர் உயிரிழப்பு

நைஜீரியாவின், நைஜர் மாகாணத்தில் பஸ் ஒன்றும் லொறி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் 14 பேர் உயிரிழந்துள்ளனர். 6 பேர் காயமடைந்துள்ளனர்.

குசோபோகி பகுதிக்கு அருகில் 30 பயணிகளுடன் பயணித்துக்கொண்டிருந்த பஸ் ஒன்று முன்னால் பயணித்துக்கொண்டிருந்த லொறியை முந்திசெல்ல முற்பட்ட வேளையில் பஸ் வேகக்கட்டுப்பாட்டை இழந்து லொறி மீதி மோதியுள்ளது .

இதன் காரணமாக மேற்படி பஸ் தீப்பிடித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு படையினர் சில மணிநேர போராட்டத்திற்கு பின் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.



மேற்படி விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போர் நிறுத்த பேச்சுவார்த்தையை இரத்து செய்த ஹமாஸ் அமைப்பு

## மீண்டும் போர் மூளும் அபாயம்

இஸ்ரேலுடனான போர் நிறுத்த பேச்சுவார்த்தையை ஹமாஸ் தரப்பு இரத்து செய்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேலியர்களின் உடல்களை அவமதிக்கும் வகையில் காசாவில் அணிவகுப்பு நடத்தி ஒப்படைத்ததாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டியது.

இது போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல் என்றும் இஸ்ரேல் தெரிவித்தது.

இதையடுத்து, நேற்று முன்தினம் பணய கைதிகளில் மேலும் 6 பேரை ஹமாஸ் விடுதலை செய்தது.

இந்த நடவடிக்கையின்போதும் காசாவில் மேடை அமைக்கப்பட்டு அணிவகுப்பு நடத்தப்பட்டு பணய கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கையின்போது மேலும் 2 பணய கைதிகளை ஹமாஸ் ஆயுதக்குழு மகிழுந்தில் அழைத்து வந்துள்ளது.

அந்த பணய கைதிகள் தங்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை விடுப்பது போன்ற காணொலியை ஹமாஸ் ஆயுதக்குழு வெளியிட்டது.

இந்த நடவடிக்கைகள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஹமாஸ் மீறும் வகையில் உள்ளதாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டியது.

மேலும், 6 பணய கைதிகளுக்கு ஈடாக இஸ்ரேலிய சிறைகளில் உள்ள பாலஸ்தீனியர்களில் 620 பேரை விடுதலை செய்ய மேற்கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தத்தையும் தற்காலிகமாக நிறுத்தியது.

பாலஸ்தீனிய கைதிகள் 620 பேரையும் இஸ்ரேல் விடுதலை செய்யவில்லை.



பாலஸ்தீனிய கைதிகளை விடுதலை செய்யாத நிலையில் இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிவிட்டதாக ஹமாஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

பாலஸ்தீனிய கைதிகளை விடுதலை செய்யாதவரை இஸ்ரேலுடன் போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் ஈடுபடப்போவதில்லை என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது.

போர் நிறுத்த பேச்சுவார்த்தையை ஹமாஸ் இரத்து செய்துள்ள நிலையில் பாதுகாப்புப் படையினரை தயார் நிலையில் இருக்கும்படி இஸ்ரேல் பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.





# உக்ரைன் மீது ரஷ்யா பாரிய ட்ரோன் தாக்குதல்

உக்ரைன் மீது ஒரே நேரத்தில் 267 ட்ரோன் தாக்குதல்களை ரஷ்யா மேற்கொண்டுள்ளதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதன்படி 119 ட்ரோன்களை உக்ரைன் வான் பாதுகாப்புப் படை இடைமறித்து சுட்டு வீழ்த்தியுள்ளது.

மேலும் போர் தொடங்கிய 3 ஆண்டுகளில் இது மிகப் பெரிய தாக்குதலாகக் கருதப்படுவதால் அங்கு பதற்றம் நிலவுவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



கனடா முரசு

திங்கட்கிழமை 24/02/2025






# டொரோண்டோ பியர்சன் விமான நிலைய செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பின

**டொரோண்டோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் கடந்த திங்கள் கிழமை ஏற்பட்ட விமான விபத்திற்குப் பிறகு செயல்பாடுகள் தற்போது வழமை நிலைக்கு திரும்பிவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

**கடந்த திங்கள்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பிறகு டெல்டா ஏர் லைன்ஸ் விமானம் 4819, மினியாபொலிஸிலிருந்து புறப்பட்டு, மூன்றாம் முனையத்தின் ஓடுபாதையில் 23 இல் தரையிறங்கும் போது விபத்துக் குள்ளாகியது.**

**இதன் போது விமானம் தலைகீழாக கவிழ்ந்திருந்தது.**

இந்த சம்பவத்தில் 21 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அனைவரும் தற்போது வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பியுள்ளனர்.

விமானத்தில் இருந்த அனைவரும் உயிரிழப்பின்றி உயிர் தப்பித்திருந்தனர்.

இந்த விபத்து காரணமாக, டொரோண்டோ பியர்சனில் பல விமானங்கள் ரத்து செய்யப்பட்டன மற்றும் பல நேரமாற்றங்களும் ஏற்பட்டன. டொரோண்டோ பெரும்பாக விமான நிலைய அதிகாரிகள் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட தகவலின்படி, இன்று 486 புறப்பாடு மற்றும் 500 வருகை விமானங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

# கனடாவில் அகதி நிலை கோரி விண்ணப்பிப்போர் எண்ணிக்கை வீழ்ச்சி



கனடாவில் அகதி நிலை கோரி விண்ணப்பிப்போர் எண்ணிக்கை வரலாறு காணாத அளவில் குறைந்துள்ளது.

2023 ஆம் ஆண்டில், கனடாவில் அகதி நிலை கோரி விண்ணப்பித்தோர் எண்ணிக்கை 1.8 மில்லியன்.

அதுவே, 2024 இல் கனடாவில் அகதி நிலை கோரி விண்ணப்பித்தோர் எண்ணிக்கை 1.5 மில்லியன் ஆக குறைந்துவிட்டதாக அரசு தரவுகள் தெரிவிக்கின்றன.

2023 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கனடாவில் அகதி நிலை கோரி விண்ணப்பித்தோர் எண்ணிக்கை 19,821.

அதுவே, இந்த ஜனவரில் கனடாவில் அகதி நிலை கோரி விண்ணப்பித்தோர் எண்ணிக்கை 11,840 ஆக குறைந்துவிட்டது.

நாட்டில் புலம்பெயர்தலுக்கு எதிரான கருத்துக்கள் நிலவிவரும் நிலையில், கனடா அரசு வெளிப்படையாகவே புகலிடக்கோரிக்கையாளர்களுக்கு ஏமாற்றமளித்துவருவதுடன், வழங்கும் விசாக்களின் எண்ணிக்கையையும் குறைத்துவருகிறது.

அதன் விளைவாகவே கனடாவில் அகதி நிலை கோரி விண்ணப்பிப்போர் எண்ணிக்கை இதுவரை இல்லாத அளவில் குறைந்துள்ளதாக செய்திகள் வெளியாகி வருகின்றன.